TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1972 ஏப்ரல் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

கூட்டுறவுத் துறைக்கு தனிக் காவலர் படை.

*863 **வினா.—திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையிலுள்ள வழக்குகளை கண்டுபிடிக்கவும் துரித நடவடிக்கை எடுக்கவும் தனி போலீஸ் படை அமைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திட்டம் பரிசீலிக்கப்பட்டு, ஆணை பிறப்பிக்கப்பட்டு "வணிக குற்றப் புலனாய்வுத் துறைப் பிரிவு" ஒன்று 1—2—1971 முதல் செயல்பட்டுவருகிறது.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, இப்படித் தனிக் காவல் பிரிவு அமைக்கும்போது இரண்டு மூன்று மாவட்டங்களை ஒன்ருகச் சேர்த்து ஒரு தனி அதிகாரியை நியமிப்பதைவிட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூட்டுறவுத் துறையிலுள்ள வழக்குகளைப் புலனாய்வு செய்து வழக்கு நடத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி அதிகாரியும் தனிக் காவல் படையும் போடுவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஐயாயிரம் ரூபாய் அல்லது அதற்குமேல் கையாடல் செய்யப்படுகிற வழக்குகளுக்கு இந்தப் பிரிவு பயன்படுத்தப்படுகிறது. அதற்கு குறைவான கையாடல் வழக்குகளுக்கு இப்போதே அந்தந்த மாவட்டத்திலுள்ள காவல் துறை பயன்படுத்தப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நமது கழக அரசு ஏற்பட்டதற்குப் பிறகு இந்தக் கூட்டுறவுத் துறையிலுள்ள கையாடல்களைக் கண்டுபிடிப்பதிலும், அதைப்போலவே சிலைத் திருட்டுக்களைக் கண்டுபிடிப் பதிலும், நமது தமிழகக் காவல் துறையினர் மிக நல்லமுறையில் பணி யாற்றிக்கொண்டு வருவதால் அத்தகைய துறையில் பணியாற்றக்கூடிய காவல் துறையினருக்குத் தனிச் சலுகை ஏதேனும் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவல் துறையினர் ஈடுபட்டுப் பணியாற்றுகின்ற ஒவ்வொரு துறையுமே முக்கியத்துவம் வாய்ந்ததுதான். ஆகவே இதை மாத்திரம் முக்கியமாக எடுத்துக் கொண்டு தனிச் சலுகை அளிப்பது என்பது இயலாது.

திரு. கே. கந்தசாமி : மதுரை கூட்டுறவு அங்காடியைப் பற்றி ஏதாவது அரசுக்குப் புகார் வந்துள்ளதா ? அப்படியானால், விசாரணை ஏதும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி விவரம் தெரிந்து கொள்ள விரும்பினால், உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு கேள்வி போடலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் கூட்டுறவுத் துறைக்காக விசேஷ போலீஸ் அதிகாரிகள் வைத்தும் கூட, தூத்துக்குடி, திருவாரூர் போன்ற இடங்களிலுள்ள சில கூட்டுறவு நிறுவனங்கள் சரியான முறையில் நடைபெறவில்லை. பணமெல்லாம் கையாடப்பட்டது என்று தகவல் வந்திருக்கிறதே அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றிலே முடிவு செய்யப்பட்ட வழக்குகளும் உண்டு. 71 வழக்குகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் தூத்துக்குடி, திருவாரூர் வழக்குகளும் இருக்கலாம். திருவாரூரைப் பொறுத்த வரையில் கூட்டுறவுத் துறையினரால் செக்ஷன் 65-இன்கீழ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மேற்கொண்டு போலீஸ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த நடவடிக்கை முடிவுற்ற பிறகு மேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தூத்துக்குடி சம்பந்தமாகத் தொகை அதிகம் என்றும் அந்த கேஸ் இன்னும் தொடரப்படவில்லை என்றும் சொல்கிறார்களே அதனுடைய நிலை என்ன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தூத்துக்குடி சம்பந்தமாக என்னிடத்தில் விவரங்கள் இல்லை. தூத்துக்குடி பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே பிரச்சினை எழுப்பிய காரணத்தால் அதுபற்றி அரசு உடனடியாகக் கவனிக்கும்

திரு. எஸ். ஆறுமுகம் : கூட்டுறவுச் சங்கங்களில் நீண்ட காலமாகப் பெரும் மோசடி, கையாடல் நடைபெற்று கண்டுபிடிக்காமல் இருந்து இப்பொழுது புதிய போலீஸ் படை அமைப்பின் மூலம் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கையாடல், மோசடி எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த வழக்குகளில் காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுப்பதற்குப் புதிதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றாலும், தொடர்ந்து இதுபோன்ற கூட்டுறவுத் துறையில் நடைபெற்றுவருகிற மோசடிகள் பல ஆண்டுக்காலமாகவே நடவடிக்கைக்கு உள்ளாகின்றன. அவற்றில் முன்பு எவ்வளவு, இப்பொழுது எவ்வளவு என்று ஒப்பிட்டுச் சொல்லுவதற்கு இயலாது.

1972 ஏப்ரல் 4]

திரு. ஆ. கு. சுப்பையா : கூட்டுறவுத் துறையில் செயலாளராக அல்லது தலைவராக இருக்கக்கூடியவர்கள் இலட்ச ரூபாய் வரையில் மோசடி செய்து தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். அந்த ரூபாயைத் திரும்ப வசூலிப்பதற்கு அது சம்பந்தப்பட்ட நபரின் குடும்பத்தாருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே சட்டப்பிரச்சினைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

Pension for wives of deceased freedom fighters.

***864. *Q.*—Dr. H. V. HANDE:** Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) whether the Government have any proposal to extend the pension amount given to the freedom fighters to their wives after the death of the pensioners ; and

(*b*) If so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) : நடைமுறையில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதிய திட்டத்தின்படி, ஓய்வூதியத் தினரின் மறைவுக்குப் பிறகு அவரின் மனைவிக்கு, அன்னாரின் மறைவு வரையிலாவது, அல்லது மறுமணம் செய்துக் கொள்ளும் வரையிலாவது, இவ்விரண்டில் எது முன்னதாக உள்ளதோ அதுவரையில் அவரின் வருவாய் திங்களொன்றுக்கு ரூபாய் நூற்றுக்கு மேற்படக்கூடாது என்ற விதிக்கிணங்க, ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, 100 ரூபாய் வருவாய் என்று வைத்திருப்பதை சற்று உயர்த்தி வைக்கக்கூடாதா என்று முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே இந்தத் திட்டம் 1966-ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்டபோதே இப்படிப் பட்ட வரையறைக்குட்பட்டுத்தான் வைக்கப்பட்டது. அப்போதே கூட இந்த அளவுக்கு எதிர்பார்க்கப்படாமலேதான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இப்போதே கிட்டத்தட்ட ஐம்பது லட்ச ரூபாயை ஓராண்டுக்கு அவர்களுக்காக வழங்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கூட பலமுறை சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதில் இந்த நூறு ரூபாய்க்கு மேற்படக் கூடாது என்ற விதியை இப்பொழுது மாற்றுவதற்கில்லை.

திரு.த. சோலையா : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல கொடுமை களுக்கும் இன்னல்களுக்கும் ஆளான பல குடும்பங்களின் பெயர்கள் அரசாங்க ரிகார்டுகளில் இல்லை என்றும், அவர்கள் உண்மையாகவே